மாலை முரசு

பக்கங்கள் 12

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆவணி 10 ஞாயிற்றுக்கிழமை 27.08.2023 அதிர்வு 27

## குளவி கொட்டி ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம், தென்மராட்சியில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது:- 04

# சீனக் கப்பல் இலங்கைக்கு வர பாதுகாப்பு அமைச்சு அனுமதி



இலங்கைக் கடற்பரப்பில் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக இலங்கை வரவுள்ள சீனக் கப்பலுக்குப் பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

அந்தவகையில் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி நிறுவனத்துடன் (நாரா) இணைந்து இலங்கைக் கடற்பரப்பில் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக "ஷி யான் 6" என்ற சீனக் கப்பலுக்கு நாரா மற்றும் வெளிவிவகார அமைச்சின் கோரிக்கையின் பேரில் பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கஜேந்திரகுமார் எம்.பியின் வீடு முற்றுகை:

# இனவெறியைத் தூண்டும் செயல்; முளையிலேயே நசுக்க வேண்டும்!




### கண்டன அறிக்கையில் கூட்டமைப்பு வலியுறுத்து

"இனவாதத்தை வேண்டுமென்றே தூண்டும் வகையில் கொழும்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பியின் வீட்டுக்கு முன்பாகக் கடந்த இரண்டு தினங்களாகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவற்றை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இனவெறியைத் தூண்டும் இவ்வாறான செயல்களை முளையிலேயே நசுக்க வேண்டும்." 04

## 3 இளம் பெண் பௌத்த துறவிகள் வெளியேறியமை பற்றி விசாரணை

### அழைத்துச் சென்ற பெண் கைது

மினுவாங்கொடையில் உள்ள பௌத்த விகாரையிலிருந்து மூன்று இளம் பெண் பௌத்த துறவிகள் வெளியேறியமை தொடர்பில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

12, 15, 18 வயதுடைய இளம் பெண் பௌத்த துறவிகள் மூவர் விகாரையிலிருந்து வெளியேறியமை தொடர்பில் கிடைத்த முறைப்பாட்டைத் தொடர்ந்து விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

விகாரையின் தலைமை மதகுரு மோசமாக நடந்து கொண்டார். இதனைத் தொடர்ந்து அவர்கள் அந்த விகாரையில் இருந்த பெண்ணுடன் அங்கிருந்து வெளியேறினர்.

அதன் பின்னர், அவர்கள் நுவரெலியாவில் உள்ள வீடொன்றுக்குச் சென்றனர்.

இதனைத் தொடர்ந்து அவர்களை உறவினர்கள் நுவரெலியா பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

## அரச உத்தியோகத்தர்களின் இல்லத்தில் கத்தி முனையில் 20 பவுண் கொள்ளை!

### யாழில் தொடரும் முகமூடிக் கொள்ளையர்களின் கைவரிசை



யாழ்ப்பாணம், சங்கிலியன் வீதியில் உள்ள வீடொன்றினுள் வீட்டின் ஓட்டைக் கழற்றி உட்புகுந்த முகமூடிக் கொள்ளைக் கும்பல் கத்தி முனையில் 20 பவுண் நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

சங்கிலியன் வீதியில் உள்ள இந்த வீட்டினுள் நேற்று நள்ளிரவு கூரையைப் பிரித்து உள்நுழைந்த மூவர் அடங்கிய கொள்ளைக் கும்பல் வீட்டில் இருந்தவர்களைக் கட்டி வைத்து கத்தி முனையில் 04



# இந்த ஆண்டில் மட்டும் 62 சூட்டுச் சம்பவங்கள்

இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்து நாடு முழுவதும் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 39 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மற்றும் மேலும் 30 பேர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர் .

இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்து நாடு முழுவதும் 62 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அவற்றில் பெரும்பாலானவை ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்களால் நடத்தப்பட்டவை எனக் கூறப்படுகிறது.

மேலும் சில துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் தனிப்பட்ட தகராறு மற்றும் சொத்துப் பிரச்சினை காரணமாக இடம்பெற்றுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர் .

எவ்வாறாயினும், பெரும்பாலான துப்பாக்கிச் சூட்டு மற்றும் கொலைகள் தங்கள் வாடிக்கையாளர்களுக்காக வேலை செய்யும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளால் மேற்கொள்ளப்பட்டன என்பதை அவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர் .

இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்து நாடு முழுவதும் அதிக எண்ணிக்கையிலான கொலைகள் பதிவாகியுள்ளன.

# வெட்டுக் காயங்களுடன் பெண்ணின் சடலம் மீட்பு



குடும்பப் பெண்ணொருவர் வெட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நுரைச்சோலை, ஷெட்டபொல களப்பில் இருந்து சடலம் மீட்கப்பட்டுள்ளது என நுரைச்சோலைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஷெட்டபொல மன்பூரிய பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தாயான செபஸ்டியன் உர்சுலா (வயது 52) என்ற பெண்ணே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

மீனவர்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையிலேயே இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இரண்டு கூரிய ஆயுதங்களால் பெண்ணின் தலையில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பெண்ணைக் கொன்ற பின்னர், அவரிடம் இருந்து 20 ஆயிரம் ரூபா, உடைகள் மற்றும் தங்க நெக்லஸ், ஒரு தங்க மோதிரம், மருந்து, தொலைபேசி ஆகியவற்றை எடுத்து ஒரு பையில் வைத்து சதுப்பு நிலக் காட்டில் மறைத்து வைத்திருந்த நிலையில் அது கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

## மட்டக்களப்பு விபத்தில்
# காயமடைந்த மற்றைய இளைஞரும் உயிரிழப்பு




மட்டக்களப்பு – கொழும்பு பிரதான வீதியில் ஓட்டமாவடி, புனாணை எனும் இடத்தில் ஏற்பட்ட விபத்தில் படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த இளைஞர் இன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

கடந்த வியாழக்கிழமை மோட்டார் சைக்கிளில் ஓட்டமாவடி நோக்கி சென்றுகொண்டிருந்த இரண்டு இளைஞர்கள் எதிரே வந்த பஸ்ஸ/டன் மோதியதில் சம்பவ இடத்திலேயே 25 வயதான எஸ்.எச்.எம்.அஸாம் எனும் இளம் ஆசிரியர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இதையடுத்து, விபத்தில் படுகாயமடைந்த மற்றைய இளைஞர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையிலேயே அவர் இன்று சிகிச்சை பலனின்றி இறந்துள்ளார்.

உயிரிழந்தவர் ஓட்டமாவடி பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய புஹார்தீன் நுஸைக் அஹமட் என்பவராவர்.

# ஒரே பிரசவத்தில் மூன்று சிசுக்கள்

## யாழ் போதனா வைத்தியசாலையில்

யாழ் போதனா வைத்திய சாலையில் இன்று ஒரே தடவையில் மூன்று பிள்ளைகள் சுகப்பிர-வசத்தில் பிறந்தனர்.

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று விசேட வைத்திய நிபுணர் அப்புத்துரை சிறிதரன் தலைமையிலான மருந்துவக் குழுவினர் கண்காணிப்பில் இந்தப் பிரசவம் இடம்பெற்றது.

தாயும் குழந்தைகளும் நலமாக உள்ளனர் என வைத்திய குழுவினர் தெரிவித்தனர்.



# யாழ் . போதனா வைத்தியசாலையில் என்டோவஸ்குலர் அனூரிசம் கொய்லிங் (Endovascular Aneurysm Coiling) நவீன சிகிச்சை ஆரம்பம்

கொழும்பை அடுத்து யாழ்.போதனா வைத்தியசாலையிலும் என்டோவஸ்குலர் அனூரிசம் கொய்லிங் நவீன சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மூளையில் ஏற்படும் இரத்தக் கசிவுகளுக்கு என்டோவஸ்குலர் அனூரிசம் கொய்லிங் என்ற நவீன சிசிச்சை முறை இதுவரை காலமும் இலங்கையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மட்டுமே மேற்கொள்ளப்பட்டுவந்தது.

கொழும்பு தேசிய வைத்தியசாலையை அடுத்து அரச மருத்துவமனை என்ற வகையில் இரண்டாவதாக யாழ். போதனா வைத்தியசாலையில் இந்த நவீன சிகிச்சைமுறை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளமை மிகவும் மகிழ்ச்சியான விடயமாகும்.

அண்மையில் (2023.08.10 அன்று) யாழ். போதனா மருத்துவமனையின் இடையீட்டு கதிரியக்கவியல் மருத்துவ நிபுணர்கள் (Interventional Radiologists), உணர்வழியியல் சிகிச்சை நிபுணர்கள் (Anaesthesiologist) மற்றும் நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர் (Neurosurgeon), வைத்தியர்கள், தாதியர்கள், கதிரியக்கவியலாளர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் முதலான மருத்துவக் குழுவினர் இணைந்து இந்த நுட்பமான நவீன சிகிச்சையை எமது வைத்தியசாலையில் வெற்றிகரமாக மேற்கொண்டமை வைத்தியசாலை வரலாற்றில் ஒரு மைல் கல் ஆகும். மருத்துவக் குழுவினர் மிகக் குறைந்த வளங்களுடன் இந்த நவீன சிகிச்சையை மேற்கொண்டமை பாராட்டுக்குரியது.

அனூரிசம் என்பது இரத்த நாடிக் குழாய்களில் ஏற்படும் பலூன் போன்ற சிறிய விரிவு ஆகும். இது தற்செயலாக அல்லது இரத்தக் கசிவு ஏற்படும் போது ஊடுகதிர்ப் படம் (ஸ்கான்) மூலமும் கண்டுபிடிக்கப்படலாம்.

மூளை போன்ற இரத்த ஓட்டம் கூடிய உடற்பாகங்களில் இவ்வாறான அனூரிசம் இருப்பது ஆபத்தானது. விபத்துக்களில் அல்லது சடுதியான இரத்த ஓட்ட மாற்றங்களினால் இவற்றிலிருந்து இரத்தக் கசிவு ஏற்படலாம். மூளையில் ஏற்படும் இதுபோன்ற இரத்தக் கசிவுகள் உயிராபத்தை ஏற்படுத்தலாம்.

மருத்துவப் பரிசோதனையின் போது இவ்வாறான அனூரிசங்கள் அடையாளம் காணப்பட்டால் இருவகையான சிகிச்சை முறைகள் தற்போது பின்பற்றப்படுகின்றன.

1. சத்திரசிகிச்சை முறை – இது நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர் மண்டையோட்டில் துவாரத்தை எற்படுத்திச் செய்யும் பாரிய சத்திர சிகிச்சையாகும்.

2. காலிலுள்ள நாடியினூடாகச் சிறிய துவாரத்தை ஏற்படுத்தி அதனூடாக நுண்ணிய குழாய் ஒன்றை மூளை வரை செலுத்தி மூளை நாடியில் ஏற்பட்ட விரிவை பிளாற்றினம் உலோகச் சுருள்களால் அடைத்தல் (Endovascular aneurysm coiling) – இது இடையீட்டு கதிரியக்கவியல் மருத்துவ நிபுணர் (Interventional Radiologist) கதிரியக்கவியல் கூடத்தில் மேற்கொள்ளும் நவீன சிகிச்சை முறையாகும்.

விபத்துக்களின் போது மூளையின் உட்புறத்தில் ஏற்படும் இரத்தக் கசிவுகளை நிறுத்த இந்த நவீன சிகிச்சை முறையை மேற்கொள்ளத் தீர்மானிக்கும்போது உரிய அளவுடைய பிளாற்றினம் சுருள்கள் கையிருப்பில் இருப்பது மிகவும் அவசியமாகும். தற்போதைய நிலையில் அரசால் இதனை வழங்க முடியாதுள்ளது. இவற்றைக் கொள்வனவு செய்வதற்கான நிதியைத் தாராள மனம் படைத்த நன்கொடையாளர்கள் வழங்க முன்வரும்போது எதிர்வரும் காலங்களில் இத்தகைய நவீன சிகிச்சைகளைத் தொடர்ச்சியாக யாழ்.




போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ள முடியும். இதற்கு ஏறத்தாழ ரூபா 5 மில்லியன் ரூபா நிதி தேவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் ஆளணி எண்ணிக்கை குறைவாக இருப்பினும் வைத்தியசாலையானது ஒரு தேசிய வைத்தியசாலையடன் ஒப்பிடக் கூடிய பல்துறை விசேட வைத்திய நிபுணர்களைக் கொண்டுள்ளது. பல்வேறு நவீன மருத்துவ சேவைகளையும் சிறப்பாக வழங்கி வருகிறது. வட மாகாணம், கிழக்கு மாகாணம் மட்டுமன்றி புத்தளம், சிலாபம் முதலான வடமேல் மாகாணத்திலிருந்தும் அனுராதபுரத்திலிருந்தும் நோயாளர்கள் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் வருகிறார்கள்.

ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து மேலதிக சிகிச்சைக்காக நோயாளர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனர். ஆனால் இன்று தெற்கிலிருந்து பொது மக்கள் சிசிச்சையை நாடி யாழ். போதனா மருத்துவமனைக்கு வருகின்றனர். குறிப்பாகக் கண்சத்திர சிகிச்சைக்காகவும், திறந்த இருதய சத்திரசிகிச்சை மற்றும் நரம்பியல் சத்திர சிகிச்சைக்காகவும் இலங்கையின் பல பகுதிகளிலிருந்தும் பொது மக்கள் இவ் வைத்தியசாலைக்கு வருகின்றனர்.

தற்போது சுபாஷ் விடுதியில் இயங்கும் இருதய சத்திரசிகிச்சைக் கிளினிக் பிரிவில் சிகிச்சைபெற அனுராதபுரம், நீர்கொழும்பு, புத்தளம், அம்பாறை, மட்டக்களப்பு முதலான வடமத்திய, வடமேல், மற்றும் கிழக்கு மாகாணங்களிலிருந்து மாதந்தம் 50 இற்றும் அதிகமானவர்கள் வருகின்றனர்.

இலங்கையில் சிறந்த முறையில் தொலைமருத்துவ சேவை மூலம் சர்வதேச மற்றும் தேசிய ரீதியில் முன்னிலையில் விளங்கும் துறைசார் விசேட மருத்துவ வல்லுநர்களது ஆலோசனையைப் பெற்று இப்பிராந்தியத்தில் சிகிச்சை பெறும் பொதுமக்களுக்கு மிகச்சிறந்த கிகிச்சையைத் தொடர்ச்சியாக வழங்கிவரும் இலங்கையின் முன்னோடி வைத்தியசாலையாகவும் ஒரேயொரு வைத்தியசாலையாகவும் யாழ். போதனா வைத்தியசாலையே திகழ்கின்றது. 2019 முதல் தொலை மருத்துவ சேவையை நாம் சிறந்த முறையில் வழங்கி வருகின்றோம்.

இன்று நாம் பல்வேறு நெருக்கடிகளை, பற்றாக்குறைகளை எதிர் நோக்குகின்றோம். கடந்த 3 வருடங்களாக விக்ரோரியா வீதியிலமைந்துள்ள சுபாஷ் விடுதியின் ஒரு பகுதியில் ஒப்பந்த அடிப்படையில் தற்காலிகமாக இயங்கிவரும் அனைத்து கிளினிக் அலகுகளையும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் இடம்மாற்றி அப்பகுதியை உரிமையாளர்களிடம் ஒப்டைக்க வேண்டியுள்ளது.

சுபாஷ் விடுதியில் தினமும் 1000 இற்கும் மேற்பட்டவர்கள் சிகிச்சைக்காக வந்து செல்கின்றனர். பிரதான வைத்தியசாலைக்கு அண்மையில் கிளினிக்கை இயக்குவதற்குப் பொருத்தமான வேறோர் இடத்தைப் பெற்றுக் கொள்வது என்பது மிகவும் சவால் மிக்கதாகக் காணப்படுகிறது.

1850 ஆம் ஆண்டு இந்த வைத்தியசாலையை வட மாகாண அரச அதிபராக இருந்த பிரித்தானிய அயல் நாட்டுப் பிரதிநிதி சேர். பேர்சிவல் அக்லண்ட் டைக் ஆரம்பித்தபோது மருத்துவமனையைச் சூழ வயலும் தோட்டங்களுமே காணப்பட்டன. அன்று யாழ்ப்பாண நகரம் விளைநிலமாக இருந்தது. வர்த்தக நகரமாக இருக்கவில்லை. யாழ்ப்பாண நகரும் அதனைச் சுற்றி உருவான வர்த்தக நகரும் இந்த வைத்தியசாலையை மையப்படுத்தியே ஆரம்பிக்கப்பட்டு வளர்ச்சியடைந்தது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

தினமும் 5000 இற்கும் அதிகமானவர்களுக்குச் சிகிச்சை வழங்கும் வட பகுதியின் ஒரேயொரு சிறப்புவகை (Tertiary care) மருத்துவமனையாகிய யாழ். போதனா வைத்தியசாலையானது இந்தப் பகுதியில் வாழும் மக்களுடைய வைத்தியசாலை என்பதை நாம் அனைவரும் உணர்ந்து அதன் வளர்ச்சிக்கு உதவ வேண்டும்.

மருத்துவ கலாநிதி
த. சத்தியமூர்த்தி
(பணிப்பாளர், போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.)

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## அரச உத்தியோகத்தர்களின்...

வீட்டில் இருந்த 20 பவுண் நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் வீட்டின் உரிமையாளரால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

வீட்டின் உரிமையாளரான கணவனும் மனைவியும் உடுவில் பிரதேச செயலகம் மற்றும் நல்லூர் பிரதேச செயலகத்தில் பணிபுரியும் அரச உத்தியோகத்தர்களாவர்.

யாழ்ப்பாணத்தில் கடந்த மூன்று தினங்களில் சுமார் ஒரு கிலோ மீற்றர் சுற்றுவட்டப் பகுதிகளில் மூவர் அடங்கிய முகமூடி கொள்ளைக் கும்பல் இரு கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளதுடன் ஓர் இடத்தில் கொள்ளையைக் கைவிட்டுத் தப்பியோடியுள்ளது.

கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு கல்வியங்காடு பகுதியில் உள்ள தேவாலயம் ஒன்றினுள் புகுந்த மூவர் அடங்கிய கொள்ளைக் கும்பல் அருட்தந்தையைக் கத்தி முனையில் மிரட்டி, அவரின் 30 ஆயிரம் ரூபா பணம் மற்றும் தேவாலய உண்டியலில் இருந்த 15 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நள்ளிரவு திருநெல்வேலி பாற்பண்ணைப் பகுதியில் உள்ள வீடொன்றின் கூரையைப் பிரித்து உள்நுழைந்த மூவர் அடங்கிய முகமூடி கொள்ளைக் கும்பல் வீட்டில் இருந்தவர்களைக் கட்டி வைத்து, கத்தி முனையில் கொள்ளையிட முயன்றபோது வீட்டார் கூக்குரல் எழுப்பவே அயலவர்கள் விழித்துக்கொண்டு தமது வீட்டு மின் விளக்குகளை ஒளிர விட்டதையடுத்து கொள்ளைக் கும்பல் தமது கொள்ளை முயற்சியைக் கைவிட்டுத் தப்பிச் சென்றது.

இந்நிலையில் நேற்று நள்ளிரவு சங்கிலியன் வீதியில் உள்ள வீடொன்றினுள் கூரையைப் பிரித்து உள்நுழைந்த மூவர் அடங்கிய முகமூடிக் கொள்ளைக் கும்பல் 20 பவுண் நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி ஆலய மகோற்சவம் இடம்பெற்று வரும் நிலையில் யாழ்ப்பாணத்துக்கு இலங்கையின் பல பாகங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் பெருமளவானோர் வருகை தந்து தங்கி நின்று நல்லூர் ஆலயத்துக்குச் சென்று வரும் நிலையில் யாழ்ப்பாணத்தில் முகமூடிக் கொள்ளையர்களின் கொள்ளைச் சம்பவம் அதிகரித்துள்ளமை அவர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

## இனவெறியைத் தூண்டும்...

– இவ்வாறு இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குருந்தூர் மலைக்கு வந்து குழப்பம் விளைவிக்கின்றார் என்று குற்றம் சாட்டியுள்ள சிங்கள பௌத்த கடும்போக்குவாத அமைப்புக்கள், அவருக்கு எதிராகப் போராட்டங்களையும் முன்னெடுத்துள்ளன. அந்தவகையில், கொழும்பு – கொள்ளுப்பிட்டியில் உள்ள கஜேந்திரகுமார் எம்.பியின் வீட்டுக்கு முன்பாக ஜனசெத பெரமுன கட்சியின் தலைவர் பத்தரமுல்லை சீலரத்ன தேரர் தலைமையிலான குழுவும், பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தலைமையிலான குழுவும் கடந்த இரண்டு தினங்களில் அடுத்தடுத்துப் போராட்டங்களை நடத்தியுள்ளன.

இந்த மோசமான நடவடிக்கைகளைக் கண்டித்தே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டனம் வெளியிட்டுள்ளது.

கூட்டமைப்பின் சார்பில் அதன் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இந்தக் கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

## குளவி கொட்டி...

தென்மராட்சி, மிருசுவில் பகுதியில் வயோதிபர் ஒருவர் நேற்றுக் காலை 7.45 மணிக்கு தேவாலயத்துக்குச் சென்று கொண்டிருந்தபோது பனை மரத்தில் இருந்து கீழே விழுந்த குளவிக்கூட்டில் இருந்த குளவிகள் அவரைக் கொட்டியுள்ளன.

அதையடுத்து, அவர் மிருசுவில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அதன்பின்னர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்றிரவு 11 மணியளவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில் இன்று அதிகாலை ஒரு மணியளவில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

தவசிக்குளம், மிருசுவில் பகுதியைச் சேர்ந்த இமானுவேல் ஜேசுரட்ணம் (வயது 79) என்கின்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவர் ஆவார்.

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# பொத்துவிலில் சிறுவர்களுக்கான இலவச மருத்துவ முகாம்





(கே. எ. ஹமீட் )

பொத்துவிலில் சிறுவர்களுக்கான இலவச மருத்துவ முகாம் தோள் கொடு தோழா 97 நண்பர்கள் வட்டம் அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று சனிக்கிழமை (26) பொத்துவில் பொது நூலகக் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

பொத்துவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட லண்டனில் சிறுபிள்ளை விசேட வைத்திய நிபுணர்களாகக் கடமையாற்றும் வைத்தியர்களான பௌமி ஹசன், ஷர்மி ஹசன் ஆகியோர் பங்குபற்றி 100இற்கும் மேற்பட்ட 14 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களை மருத்துவ முகாமில் இணைத்துக் கொண்டனர்.

நீண்ட நாள்களாகப் பாரிய நோய்களால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் சிறார்கள் மற்றும் ஆரம்ப கட்ட பாதிப்புகளுக்கு உள்ளான சிறுவர்கள் ஆகியோருக்கு இங்கு மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. மூவின மக்களும் பயன் பெற்றுக் கொண்டனர்.

இந்த நிகழ்வில் பொத்துவில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் 97 நண்பர் வட்ட அமைப்பின் உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.


Build Your
DREAM
HOUSE
NORTH WALL
ENGINEERING
Consept to Creation
Recently Completed
Projects
Point Pedro
Alvai North
Point Pedro
OUR SERVICESS
• Architecturel Design
• Structural Plans
• 2D,3D Drawing
• BOQ
• Interior Design
• Landscaping
: 0777 818 208 / 0774 002 766
: Nelliyady, Jaffna


குருவே துணை
வாழ்க வையகம்
வாழ்க வளமுடன்
SKY
sky
Yoga
உலக சமுதாய சேவா சங்கம் - கொழும்பு மண்டலம்,
இலங்கை மனவளக்கலை மன்ற அறக்கட்டளை
கொழும்பு அறிவுத்திருக்கோயில்
SKY
யோகா நிலையம்
திறப்பு விழா
27.08.2023
ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணி
அறிவுத் திருக்கதவு திறத்தல்
திறந்து வைப்பவர்:
உலக சமுதாய சேவா சங்கத் தலைவர்,
அருள்நிதி பத்மஸ்ரீ SKM மயிலானந்தன் அவர்கள்
திறப்புவிழா நிகழ்ச்சிகள்
இடம்: இராமகிருஷ்ண மிஷன் பிரதான மண்டபம்
காலை அமர்வு 10.30 - 1.00 மணி வரை
மாலை அமர்வு 4.30 - 8.00 மணி வரை
சிறப்புரை
திருமதி பாரதி பாஸ்கர்
பட்டிமன்றப் பேச்சாளர், சென்னை, தமிழ்நாடு
அறிவுத்திருக்கோயில்
இல. 53 1/A, இராமகிருஷ்ண வீதி, கொழும்பு 06, இலங்கை.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இராஜதந்திர பதற்றம்

இருப்பதை இல்லாதது போல காட்டுவதும், இல்லாததை இருப்பது போல பாவனை செய்வதும் அரசியல் சாணக்கியம். தவிர்க்க முடியாத இராஜ தந்திரமும் கூட.

இலங்கை வெளிவிவகார அமைச்சரும் அந்த இராஜதந்திரத்தில் சோடை போனவர் அல்லர்.

இலங்கைக்கும் இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளில் எவ்விதமான பதற்றமும் இல்லை என்று அமைச்சர் அலி சப்ரி கூறியுள்ளமையை இந்தக் கண்ணோட்டத் தில்தான் பார்க்க வேண்டியுள்ளது.

கடந்த வருடமும் இதே காலப்பகுதியில் சீனாவின் ஆய்வுக் கப்பல் ஒன்று அம்பாந்தோட்டைக்கு வருகை தந்தமை பெரும் இராஜதந்திரப் பதற்றங்களை ஏற் படுத்தியது என்பது வெளிப்படையானது.

இப்போதும் ஒக்டோபரில் சீனாவின் மற்றொரு ஆய்வுக் கப்பல் இலங்கைக்கு வருகின்றது என்ற செய்தி வெளியானதும் இராஜதந்திர மட்டத்தில் அரசியல் பரபரப்பு தொற்றிக் கொண்டது. அந்தக் கையோடு இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ் நாத் சிங் இலங்கை விரைகின்றார் என்ற செய்தியும் வெளியானது. அவரது விஜயம் அடுத்த வாரத்தில் அமைகிறது.

இந்த வருகைகள் இந்தியா - சீனா நாடுகளுக்கு இடையிலான அதிகாரப் போட்டி அழுத்தங்களுக்கு நடுவில் இலங்கை சிக்கியுள்ளமையையும், இரு தரப்பு உறவுகளில் பதற்றங்கள் ஏற்பட்டுள்ளமையையும் காட்டுகின்றன என்று விடயமறிந்த வட்டாரங் களில் தகவல்கள் வெளியாகின. ஆனால் அவற்றை இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மறுத் துள்ளார்.

இந்த இரு விஜயங்களும் - சீனக் கப்பலின் வருகை யும் இந்தியப் பாதுகாப்பு அமைச்சரின் விஜயமும் - ஏற்கனவே தயார் செய்யப்பட்ட நிகழ்ச்சி நிரல்களின் அடிப்படையில் அமைந்தவை என்கிறார் அலி சப்ரி.

இலங்கை அணிசாராக் கொள்கையைப் பின்பற்றி வருகின்றது என்றும், இந்தியா மற்றும் சீனாவுடன் மிக நெருக்கமாக இணைந்து செயல்பட்டு வருகின்றது என்றும் அலி சப்ரி கூறினாலும் உண்மை நிலைமை யாது என்பது வெளிப்படையானது.

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் புதுடில்லி சென்றார். அவர் திரும்பிய கையோடு, அந்த விஜயத்தைச் சமன் செய்யும் விதத்தில் இலங்கை ஜனாதிபதிக்கு அடுத்த நிலையில் இருக்கும் பிரதமர் தினேஷ் குணவர்தன சீனா பறந்தார்.

மிக மோசமான பொருளாதார நெருக்கடியில் சிக்கி இருக்கும் இலங்கை அதிலிருந்து மீளுவதற்குத் தனது வெளிநாட்டுக் கடன் கொடுப்பனவுக் கடப்பாடுகளை மறுசீரமைப்புச் செய்ய வேண்டியுள்ளது. அதனைச் செய்தால் மட்டுமே இலங்கையை மீட்பதற்கான சர்வதேச நாணய நிதியத்தின் உதவித் திட்டத்தைச் செயல்படுத்த முடியும்.

ஆனால் இலங்கைக்கு அதிக அளவில் கடனை வழங்கி, அந்தக் கடன் பொறியில் இலங்கையை மாட்ட வைத்திருக்கும் சீனா, அந்த மறுசீரமைப் புக்கு தயார் என்று சைகை காட்டுகின்றதே தவிர, அதற்கான இசைந்த திட்டம் ஒன்றுக்கு இணங்கி வருவதாக இல்லை

இந்த நெருக்கடிகளுக்கு மத்தியில்தான் இருதலைக் கொள்ளி எறும்பாக, ஒரு புறம் சீனா, மறுபுறம் இந்தியா என்றஇராஜதந்திரநெருக்கடிகளுக்குமத்தியில்அல்லாடு கின்றது இலங்கை. சூரியனை சாக்குப் போட்டு மறைப் பது போல, அப்படி ஏதும் பதற்றமோ நெருக்கடியோ இல்லை என்று கதை விடுகிறார் நமது வெளி விவகார அமைச்சர். அவ்வளவுதான்.

# தொழில் வழிகாட்டல் செயலமர்வு



(நூருல் ஹுதா உமர்)

மெற்றோ பொலிட்டன் கல்வி நிறுவனம் மற்றும் மனித மேம்பாட்டு அமைப் பின் ஏற்பாட்டில் முழுநாள் தொழில் வழிகாட்டல் மற்றும் திறன் மேம்படுத்தல் சம்பந்த மான செயலமர்வு சம்மாந் துறை அல் – மர்ஜான் தேசிய பாடசாலை எம்.எஸ். காரி யப்பர் மண்டபத்தில் நடை பெற்றது.

மெற்றோ பொலிட்டன் கல்வி நிறுவனத்தின் ஸ்தா பக தலைவர் கலாநிதி சிராஸ் மீராசாஹிப் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அல்–மர்ஜான் வித்தியாலய அதிபர் எச்.எம். அன்வர் அலி, மனித மேம்பாட்டு அமைப் பின் பணிப்பாளர் எஸ்.ஏ. முஹம்மட் அஸ்லம், மெட்ரோ பொலிட்டன் கல்முனை காரி யாலய ஒருங்கிணைப் பாளர் சீனத் ஹானியா, முகாமையாளர் முஹம்மட் சப்னாஸ், கல்வி நிறுவன உதவி முகாமையாளர்கள் மற்றும் மனித மேம்பாட்டு அமைப்பின் உயர்பீட உறுப் பினர்கள் எனப் பலர் பங் கேற்றனர்.

இந்தச் செயலமர்வில் வளவாளராக இலங்கை தென்கிழக்கு பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையா ளர் அகமட் சிப்லி, கலந்து கொண்ட நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர் யுவதிகளுக்கு கல்வியின் முக்கியத்துவம் மற்றும் எதிர்கால கல்வியின் நுட்பங்கள் பற்றி விரிவுரை யாற்றினார்.

அன்று மாலை இடம் பெற்ற சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கல்வி நிறுவ னத்தின் ஸ்தாபகர் கலாநிதி சிராஸ் மீராசாஹிப், அமைப் பின் பணிப்பாளர் எஸ்.ஏ. முஹம்மட் அஸ்லம், தென் கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் அகமட் சிப்லி, உட்பட பலரும் கலந்துகொண்டு சான்றி தழ்களை வழங்கி வைத்த னர்.

# கல்முனையில் ரிஷாத் சந்திப்பு




(எம்.எம்.றம்ஸீன்)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கல்முனை அமைப் பாளரும், முன்னாள் கல் முனை மாநகர உறுப்பின ருமான எம்.ஐ.எம் அப்துல் மனாப்பின் ஏற்பாட்டில் திடீர் விஜயம் செய்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், முன்னாள் அமைச்சரும், வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பின ருமான ரிஷாத் பதியுத்தீன் மற்றும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் கல்முனை கிளை உறுப்பி னர்களுக்கும் இடையிலான சிநேக பூர்வமான சந்திப்பு கல்முனை கிளை அலு வலகத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் அலு வலகம் இங்கு அமையப் பெற்றதன் நோக்கத்தையும், ஜம்இய்யத்துல் உலமாவின் நலத் திட்டங்கள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப் பட்டது.ஜம்இய்யாவின் எதிர் கால செயற்பாடுகளுக்கும் தனது ஒத்துழைப்பை வழங்குவதாகவும் ரிஷாத் பதியுத்தீன் இதன்போது தெரிவித்தார்.

# ஒரு லட்சத்து 62 ஆயிரம் ரூபாவுக்கு ஏலத்தில் விற்கப்பட்ட மாம்பழம்!







வவுனியா உக்குளாங்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ திருவிழாவின் போது மாம்பழம் ஒன்று ஒரு லட்சத்து 62 ஆயிரம் ரூபாவுக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டது.

உக்குளாங்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் மகோற்சவ உற்சவத்தின் 6 ஆம் நாள் மாம்பழ திருவிழாவான நேற்று மாலை (26) விநாயகருக்கு படைக்கப்பட்ட மாம்பழம் ஒன்று கோவில் வளர்ச்சி நிதிக்காக ஏலத்தில் விடப்பட்டது.

இதன்போது, பலத்த போட்டிக்கு மத்தியில் ஒரு லட்சத்து 62 ஆயிரம் ரூபாவுக்கு குறித்த மாம்பழம் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டது.

இந்த மாம்பழத்தை வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில் வசிக்கும் ச.சிந்துஜா என்பவர் ஒரு லட்சத்து 62 ஆயிரம் ரூபா செலுத்தி ஏலத்தில் கொள்வனவு செய்துள்ளார்.





# முன்னாள் எதிர்கட்சி தலைவர் அமிர்தலிங்கத்தின் பிறந்த தினத்தில் கேக் வெட்டிக் கொண்டாட்டம்!





முன்னாள் எதிர்கட்சி தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 96 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு வலிகாமம் மேற்கு பிரதேச சபை முன்றலில் அமைந்துள்ள அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் திருவுருவசிலை வளாகத்தில் பண்ணாகம் கிராம அபிவிருத்தி சங்கத்தினர் மற்றும் பண்ணாகம் அண்ணா கலைமன்றத்தினரால் விசேட நிகழ்வுகள் இன்று காலை முன்னெடுக்கபட்டன .

இதன்பொழுது நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் வட்டுக்கோட்டை தொகுதி தமிழரசுக் கட்சி தலைவருமான ஈ.சரவணபவன் 96 ஆவது அகவையை நினைவுறுத்தும் முகமாகக் கேக்வெட்டினார். தொடர்ந்து அமிர்தலிங்கத்தின் திருவுருவசிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் பண்ணாகம் அண்ணா கலைமன்றத்தினர், பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், இலங்கை தமிழரசு கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதி மகளிர் அணிச் செயற்பாட்டாளர் பரமானந்தவள்ளி, பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# சிறுவர் கழகங்களை வலுவூட்ட விளையாட்டு உபகரணம் வழங்கல்





**(எம்.எம்.றம்ஸீன்)**

யுனிசெப்நிறுவனத்தின்அனுசரணையில் காரைதீவு பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்களின் ஒழுங்கமைப்பில் சிறுவர் கழகங்களை தொடர்ச்சியாக வலுவூட்டும் பொருட்டு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது.

காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஞானம் ஜெகராஜனின் தலைமையில் காரைதீவு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் காரைதீவு விளையாட்டு கழகத்தினரின் ஒத்துழைப்புடன் சிறுவர் கழகங்களுக்கு விளையாட்டு பயிற்சிகள் வழங்குவது தொடர்பான கலந்துரையாடல்களும் இடம்பெற்றன.

இதன் போது காரைதீவு விளையாட்டுக்கழக நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள், உளவள ஆலோசகர்கள் கிராம மட்ட, பிரதேச மட்டசிறுவர் கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் இறுதியில் சிறுவர் விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டன.




# மன்சூர் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணம்: சம்மாந்துறை வி. கழகம் சுவிகரித்தது!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது நண்பர்கள் வட்டத்தால் நடத்தப்பட்ட 2023 ஆம் ஆண்டுக்கான மர்ஹூம் ஏ.ஆர்.மன்சூர் ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுத் தொடரின் சம்பியன் கிண்ணம் சம்மாந்துறை விளையாட்டுக் கழக வசமானது.




சாய்ந்தமருது நண்பர்கள் வட்டம் ஒழுங்கு செய்திருந்த 20 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கடின பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் கடந்த வெள்ளிக்கிழமை (25) சாய்ந்தமருது பொலிவேரியன் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 32 விளையாட்டுக் கழகங்கள் பங்கேற்ற மேற்படி கிரிக்கெட் சுற்றுப் போட்டி கடந்த 6 மாத காலமாக இடம்பெற்று வந்த நிலையில் இறுதிப் போட்டி சாய்ந்தமருது பிளையிங் ஹோர்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும், சம்மாந்துறை விளையாட்டுக் கழகத்துக்கும் இடையில் இடம்பெற்றது.

முதலில் துடுப்பாடிய சம்மாந்துறை விளையாட்டுக் கழகம் 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்படுத்தாடிய சாய்ந்தமருது பிளையிங் ஹோர்ஸ் விளையாட்டுக்கழகம் 15.1 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 74 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது.

பரிசளிப்பு விழா நிகழவுக்கு பிரதம அதிதியாக முன்னாள் அமைச்சர் மர்ஹூம். ஏ.ஆர்.மன்சூரின் புதல்வரும், கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வரும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளரும், கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் ஸ்தாபகருமான ரஹ்மத் மன்சூர் கலந்து கொண்டார்.

இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற சம்மாந்துறை விளையாட்டுக் கழகத்துக்கு 70 ஆயிரம் ரூபா பணப்பரிசும், சம்பியன் கிண்ணமும், 2 ஆவது இடம் பெற்ற சாய்ந்தமருது பிளையிங்ஹோர்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கு 30 ஆயிரம் ரூபா பணப் பரிசும் வழங்கப்பட்டன. சுற்றுப் போட்டியின் தொடர் ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்ட சம்மாந்துறை விளையாட்டுக் கழகத்தின் அணித் தலைவர் எச்.ஆர்.எம்.இஸ்மத்துக்கு 7500 ரூபா பணப்பரிசும் நினைவுச் சின்னமும், இறுதிப் போட்டியின் சிறப்பாட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்ட அதே அணியைச் சேர்ந்த எஸ்.எம். அகப்ஹாமுக்கு நினைவுச் சின்னம் வழங்கப்பட்டன். இறுதிப் போட்டியில் பங்கு பற்றிய இரு அணி வீரர்களும் பதக்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.



# மக்களவைத் தேர்தலில் காங்கிரஸின் பிரதமர் வேட்பாளர் ராகுல் காந்தி!

## - ராஜஸ்தான் முதல்வர் அசோக் கெலாட் தகவல்

2024 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் ராகுல் காந்தி தான் காங்கிரஸ் கட்சியின் பிரதமர் வேட்பாளர் என்று ராஜஸ்தான் முதல்வர் அசோக் கெலாட் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தனியார் தொலைக் காட்சிக்கு அவர் அளித்த நேர்காணலில், 2024 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் ராகுல் காந்தி தான் காங்கிரஸ் கட்சியின் பிரதமர் வேட்பாளர். இண்டியா கூட்டணியில் உள்ள 26 எதிர்க்கட்சிகளும் இணைந்து இந்த முடிவை எடுத்துள்ளன.

தீவிர ஆலோசனைகளுக்குப் பின்னர் இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது. இறுதியில் ராகுல் காந்தியை பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இண்டியா கூட்டணியின் அவசியத்தைப் பற்றி, ஒவ்வொரு தேர்தலிலும் சில உள்ளூர் காரணிகள் கவனம் பெற்று ஆதிக்கம் செலுத்தும். ஆனால் இப்போது நாடு முழுவதுமே ஒருவித அழுத்தம் உருவாகியுள்ளது. அதுதான் 26 கட்சிகளை ஒருங்கிணைத்துள்ளது.



பிரதமர் மோடி இன்னும் ஆணவத்துடனேயே இருக்கக் கூடாது. 2014 இல் அவர் ஆட்சிக்கு வந்தபோது 31 சதவீதம் வாக்குகளையே அவர் பெற்றிருந்தார். மீதமுள்ள 69 சதவீத வாக்குகள் அவருக்கு எதிராகவே இருந்தன. கடந்த மாதம் பெங்களூருவில் இண்டியா கூட்டணி ஆலோசனை நடத்தியபோது தேசிய ஜனநாயக கூட்டணி பயந்துவிட்டது.

2024 ஆம் ஆண்டு தேர்தலில் 50 சதவீத வாக்குகளுடன் வெற்றி பெறுவோம் என்று மோடி வேண்டுமானால் நம்பிக்கை தெரிவிக்கலாம் ஆனால் அதற்கு வாய்ப்பில்லை. மோடி புகழின் உச்சியில் இருந்தபோதே அவரால் 50 சதவீத வாக்குகளைப் பெற இயலவில்லை.

எனவே 2024 தேர்தலில் இந்த சதவீதம் இன்னும் குறையவே செய்யும். 2024 தேர்தல் முடிவுகள் பிரதமர் யார் என்பதை தீர்மானிக்கும் என்று தெரிவித்துள்ளார்.

# நீட் தேர்வுக்கு எதிராக பேசுவது மாணவர்களுக்கு செய்யும் துரோகம்!

## - ஆளுநர் தமிழிசை கருத்து

நீட் தேர்வுக்கு எதிராக பேசுவது மாணவர்களுக்கு செய்யும் துரோகம் என தெலங்கானா ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் கருத்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கோவை விமான நிலையத்தில் அவர் இன்று ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் உள்ளிட்டோர் ஆளுநரை வேண்டுமென்றே விமர்சனம் செய்து வருகின்றனர். அந்தப் பொறுப்புக்கு மரியாதை அளிக்க வேண்டும்.

இந்தச் சண்டையை முடித்துவைக்க என்ன முயற்சி என்பதை பார்க்க வேண்டும். ஆனால், முதல்வர் விமர்சனம் செய்வதைத்தான் தூண்டிவிட்டுக் கொண்டிருக்கிறார். ஆளுநரை தரக் குறைவாக விமர்சனம் செய்வதை ஏற்றுக் கொள்ள இயலாது.

முதல்வரும், ஆளுநரும் அமர்ந்து பேச வேண்டும். முதல்வர் அதற்கு முயற்சி செய்ய வேண்டும். ஆளுநர் மீது விமர்சனம் செய்யாதீர்கள் என தனது கட்சியினருக்கு முதல்வர் கட்டளையிட வேண்டும்.



எல்லா மாநிலங்களும் நீட் தேர்வை ஆதரிக்கின்றன. ஆனால், தமிழகத்தில் இதை தேவையில்லாமல் அரசியல் ஆக்குகின்றனர். நீட் தேர்வுக்கு எதிராக பேசுவது மாணவர்களுக்கு செய்யும் துரோகம். கார்த்தி சிதம்பரம் நீட் தேர்வுக்கு முழு ஆதரவாக உள்ளார். அவரது அம்மாதான் நீதிமன்றத்தில் போராடி நீட் தேர்வை வாங்கிக் கொடுத்தார்.

உயிரைக் காக்கும் தொழிலை படிக்க வேண்டும் என்று நினைத்தவர்கள், உயிரைப் போக்குவது எப்படி சரியாக இருக்கும். உயிரைப் போக்குவதை இங்கு கொண்டாடுகின்றனர். இது மிகவும் கவலை அளிக்கிறது என்று தெரிவித்துள்ளார்.

# சென்னையில் கடும் மழை!

சென்னை மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் நேற்று இரவு முதல் இன்று அதிகாலை வரை பல்வேறு இடங்களில் மழை பெய்துள்ளது. இரவு முழுவதும் பெய்த மழையால் குளிர்ச்சியான சூழல் நிலவுவதால், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, ஓகஸ்ட் 26 ஆம் திகதி முதல் எதிர்வரும் செப்டம்பர் 1 ஆம் திகதி வரை, தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் மழை பெய்யக்கூடும் என்றும், சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் ஒருசில பகுதிகளில் இடிமின்னலுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில், சென்னையில் கடந்த சில நாட்களாகவே மாலை நேரங்களில் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் மழை பெய்து வந்தது.

இதனால், சென்னையின் பல்வேறு பகுதிகளில் குளிர்ச்சியான சூழல் நிலவுவதால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# மத்திய பிரதேச மாநிலத்தில் அமைச்சரவை விரிவாக்கம்

மத்திய பிரதேச மாநிலத்தில் தேர்தலுக்கு சில மாதங்களே உள்ள நிலையில் முதல்வர் சவுகான் தனது அமைச்சரவையை விரிவுபடுத்தியுள்ளார்.

ராஜேந்திர சுக்லா, கவுரிசங்கர் பிசேன், ராகுல் லோதி ஆகிய மூன்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது. ஆளுநர் மாளிகையில் நேற்று நடைபெற்ற விழாவில் இவர்கள் பதவியேற்றனர்.

இதேவேளை, மத்தியப்பிரதேச முதல்வராக சிவராஜ் சிங் சவுகான், நான்காவது முறையாக பதவி வகிக்கிறார். மத்திய பிரதேச மாநிலத்தில் நீண்டகால முதல்வர் என்ற பெருமையையும் அவர் பெற்றுள்ளார்.



# இரண்டாவது முறையாகவும் சிம்பாப்வே ஜனாதிபதியாக இமேர்சன் தெரிவானார்!



சிம்பாப்வே ஜனாதிபதி தேர்த லில், ஜனாதிபதி இமேர்சன் நன்கக்வா இரண்டாவது முறையாக தெரிவாகியுள்ளார்.

52.6 சதவீதமான வாக்குகளை பெற்று அவர் தெரிவாகியுள்ள போதிலும் பரந்த அளவில் வாக்கு மோசடிகள் இடம்பெற்றுள்ளது என எதிர்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

தேர்தல் வாக்குப்பதிவு நடவடிக்கைகள் சர்வதேச தரத்தை கொண்டிருக்கவில்லை என தேர்தலை கண்காணிக்கும் பார்வையாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த 2017 ஆம் ஆண்டு சிரேஷ்ட அரசியல்வாதியான ரொபேட் முகாபேக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஆட்சி கவிழ்ப்பையடுத்து இவர் ஆட்சி நிர்வாகத்தை பொறுப்பேற்றார்.

இதேவேளை, சர்வதேச ரீதியாக பெரும் பண வீக்கம், வறுமை, வேலையில்லா பிரச்சினை மற்றும் பாதுகாப்பற்ற சூழலில் சிம்பாப்வே மக்கள் வாழ்கின்றனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# உக்ரைனின் விமான விபத்து: விமானிகள் மூவர் உயிரிழப்பு





உக்ரைனின் இடம்பெற்ற விமான விபத்தொன்றில் 3 விமானப்படை விமானிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

ரஷ்யாவின் படையெடுப்பின் ஆரம்ப கட்டத்தின் போது கெய்வ் மீதான போரில் பங்கேற்று மிகவும் பிரபலமான ஆண்ட்ரி பில்ஷிகோவ் என்ற விமானியும் இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு உக்ரைன் பகுதியில் பறந்து கொண்டிருந்த இரண்டு எல்-39 பயிற்சி விமானங்கள் விபத்துக்குள்ளாகியிருந்தன.

கடந்த வெள்ளிக்கிழமை இந்த விபத்து இடம்பெற்றது என உக்ரைனின் விமானப்படை செய்தித் தொடர்பாளர் யூரி இஹ்னாட் நேற்றைய தினம் உறுதிப் படுத்தினார்.

ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி காணொளியொன்றில் ஊடான உரையில் உயிரிழப்புகளை உறுதிப்படுத்தி, இரங்கல் தெரிவித்துள்ளதுடன், உக்ரைனின் சுதந்திர வானத்தை பாதுகாத்த எவரையும் தமது நாடு ஒருபோதும் மறக்காது எனவும் கூறியுள்ளார்.

# ருமேனியாவில் எரிவாயு நிலையத்தில் வெடி விபத்து!



ருமேனியாவில் பெட்ரோலிய எரிவாயு நிலையத்தில் இடம்பெற்ற வெடி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.


ருமேனியாவின் – புக்கரெஸ்ட் பகுதி அருகே பெட்ரோலிய எரிவாயு நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்த எரிவாயு நிலையத்தில் நேற்று இரண்டு வெடி விபத்துகள் ஏற்பட்டது.

எரிவாயு நிலையத்தில் முதலில் ஏற்பட்ட வெடி விபத்திற்குப் பிறகு, தீ அருகிலுள்ள வீடுகளுக்கு பரவியது.

இதனால் 300 மீற்றர் சுற்றளவில் உள்ள வீடுகளில் இருந்து மக்கள் உடனடியாக வெளியேற்றப்பட்டனர்.

மேலும், இதனால் சாலைப் போக்குவரத்தில் தடை ஏற்பட்டது. மாலையில் இரண்டாவதும் வெடி விபத்து ஏற்பட்டது.

இந்த வெடி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும், 33 பேர் காயமடைந்துள்ளனர். வெடி விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.


கசூரினா
படகுச் சேவை
சேவைகள்
01. மூன்று கிலோ மீற்றர் தூரம் சுற்றிப் பார்த்தல்
02. பவளப் பாறைகள் சுற்றிப் பார்த்தல்
03. வெளிச்சவீட்டு கடற்பகுதியைச் சுற்றிப் பார்த்தல்
04. பருத்தித்தீவு சென்று வருதல்
05. நயினாதீவு சென்று வருதல்
06. காரைநகர் கடற்கோட்டையைச் சுற்றிப் பார்த்தல்
காரைநகர் கசூரினா கடலில் கண்ணாடி இழைப்படகில் பயணித்தவாறே கடலின் அடியில் பவளப்பாறைகள் மற்றும் மீன் இனங்களை கண்டு ரசிக்கக் கூடிய விதத்தில் கண்ணாடி பொருத்தப்பட்ட படகுகள் இன்னும் சில வாரங்களில் எம்மால் சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றன.
கசூரினா படகுச்சேவை தொடர்புகளுக்கு : 077 078 3949